**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No. 24 of 2021

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-6 குப்பன் | Caste | - |
| Father / Husband Name | கண்டி | Calling | விவசாய கூலி |
| Village | பச்சார்பாளையம் | Religion | இந்து |
| Cell | 9578685062 | Age | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.11.2022

**முதல் விசாரணை-**

நான் சுல்தான்பேட்டைக்கு அருகில் உள்ள பச்சார்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், எதிரி இறந்த காளியம்மாளின் கணவர். காளியம்மாளின் அப்பா பெயர் பொன்னுச்சாமி, அம்மா பெயர் அருக்காணி. காளியம்மாளின் அம்மா வீடு என் வீட்டிற்கு அருகில் உள்ளது. காளியம்மாளை கொண்டேகான்பாளையம், நெகமம் அருகில் திருமணம் செய்து கொடுத்தார்கள். சாவதற்கு முதல் நாள் இரவு இரண்டு பேருக்குள் சண்டை, அந்த சண்டை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. மறுநாள் காலை 7.00 மணிக்கு நாங்கள் பழனிச்சாமி காட்டுக்கு வேலைக்கு சென்றுவிட்டோம். சுமார் 9.00 மணிக்கு காளியம்மாள் தூக்குபோட்டுவிட்டார் என்ற தகவல் வந்தது, உடனே நாங்கள் அ.சா.1 வீட்டுக்கு வந்து பார்த்தோம். காளியம்மாளை உள்ளே படுக்க வைத்திருந்தார்கள். கழுத்தில் தழும்பு இருந்தது. ஆம்புலன்ஸ் வந்து சந்திராபுரம் கொண்டுபோனார்கள், சந்திராபுரம் நாங்களும் போனோம். 2 மணி நேரம் சந்திராபுரத்தில் காளியம்மாளை எதிரி வருவதற்காக வைத்திருந்தார்கள், எதிரி வராததால் கோயமுத்துார் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அங்கேயும் போனேன். ஜி.கெச்.க்கு நான் போனபோது எதிரியின் பெற்றோர்களும், காளியம்மாளின் பெற்றோர்களும் இருந்தார்கள். சாட்சி போடுகிறீர்களா என்று ஒரு அதிகாரி கேட்டார், கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை

அறிக்கையில் பஞ்சாயத்தார் முச்சலிக்காவில் நான் ஒரு கையொப்பம் செய்திருக்கிறேன், 5 வது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.7**.

**குறுக்கு விசாரணை -**

அ.சா.1 அருக்காணியும், அ.சா.2 கோபாலும் எனக்கு பக்கத்து வீட்டுககாரர், உறவுக்காரர் அல்ல. காளியம்மாள் இறப்புக்கு முன்பு எத்தனை நாள்களுக்கு முன்பு நான் பார்த்தேன் என்றால் காளியம்மாளை இறப்பதற்கு முன்பு தினந்தோறும் பார்ப்பேன். போலீசார் விசாரணையிலும் முன் விசாரணையில் சொன்னதுபோலவே சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். காளியம்மாள் குடும்பத்துக்குள் என்ன பிரச்சனை என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதியைத்தான் அதிகாரியிடமும் சொன்னேன் என்றால் சரிதான்.